# நெசவாளர்கள் விருதுக்கான பரிசுத் தொகை அதிகரிப்பு!

## சட்டப்பேரவையில் அமைச்சர் ஆர். காந்தி பதிலுரை...

9ஆம் பக்கத் தொடர்ச்சி

ஏற்றுமதி ஜவுளி உற்பத்திக்கு Viscose Staple Fiber இறக்குமதி செய்ய, Quality Control Orderலிருந்து 11.3.2024 முதல் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதுவும் நம்முடைய முதலமைச்சர் அவர்களால்தான். இது ஒன்றும் சாதாரணது அல்ல. அந்த mill ownersஐ கேட்டால்தான் தெரியும்.

ஆலை தொழிலாளருக்கு 1.1.2021 முதல் மாதம் ஒன்றிற்கு ரூ.2,500/வீதம் ஊதிய உயர்வு வழங்கப்பட்டது.

கூட்டுறவு நூற்பாலைகளுக்கு புதிய இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. ரூபாய் 26 கோடியே 50 இலட்சம் மதிப்பில் 10 Auto Coner இயந்திரங்களும், ரூபாய் 2.04 கோடி மதிப்பில் 6 Yarn Conditioning Machinesம், ரூபாய் 2.72 கோடி மதிப்பில்,

2 Millsல் Compact Spinning Machinesம் கொள்முதல் செய்து, நிறுவப்பட்டுள்ளன.

Dedicated Power Feeders நிறுவுதல்: பாரதி & கன்னியாகுமரி ஆகிய 2 கூட்டுறவு நூற்பாலைகளில், ரூபாய் 1.55 கோடி மதிப்பில் 11 KV Dedicated Power Feeders நிறுவப்பட்டுள்ளன.

கிருஷ்ணகிரி கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர்களின் EPF நிலுவை தொகையானது 1998 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை வழங்கப்படவில்லை. தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், அவர்களுக்கு 4 கோடியே 16 இலட்சம் ரூபாய் EPF நிலுவைத் தொகை 19.1.2022ல் செலுத்தப்பட்டது. இதில் 328 நபர்கள் பயன் பெற்றுள்ளனர். அதேபோல, 2013 ஆம் ஆண்டிலிருந்து Gratuity நிலுவைத் தொகை, ரூபாய் 5 கோடியே 47 இலட்சம், 146 நபர்களுக்கு 9.3.2024 அன்று வழங்கப்பட்டது.

கடந்த ஆட்சியில், 2015 ஆம் ஆண்டு, Mini Textile Park அமைக்க அரசாணை வெளியிடப்பட்டது. ஆனால், தொழில்முனைவோர்கள் எவரும் முன்வரவில்லை. இதற்கான காரணம் அறிந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்—இதற்கான காரணம் என்னவென்றால், 2 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும், 3 units ஆரம்பிக்க வேண்டும். மானியம் 2 கோடி ரூபாய் கொடுக்கிறோம். அதில் ஒரு condition என்ன வைத்திருந்தார்கள் என்றால், 2 கோடி ரூபாயை infrastructureக்குத் தான் பயன்படுத்த வேண்டும், road போட வேண்டும் என்று சொன்னதால், தொழில்முனைவோர்கள் யாருமே முன்வரவில்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன், நான் தலைவர் அவர்களிடத்தில் இதுகுறித்து தெரிவித்து, அதை மாற்றி, நாங்கள் கொடுக்கின்ற மானியத்தை எதற்கு வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொன்ன பிறகு, உடனே நிறைய தொழில் முனைவோர்கள் வந்தார்கள். இப்பொழுது கிட்டத்தட்ட 17 பூங்காவிற்கு அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கரூரில்8, திருப்பூரில்5, ஈரோடு1, தருமபுரி1, திருவள்ளூர்1, திருப்பத்தூர்1 என்று 17 பூங்காக்களுக்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. 17 Mini Textile Parks அமைக்க ரூபாய் 40 கோடியே 70 இலட்சம் மானியத் தொகை வழங்க அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த 17 பூங்காக்களில், 432025 அன்று VMD Textile Park கரூரிலும், RMS Mini Textile Park திருப்பூரிலும் திறந்து வைத்துள்ளோம். மீதமுள்ள 15 பூங்காக்களின் பணிகள், விரைவாக நடைபெற்று வருகின்றன.

நூற்பாலைகளுக்கு வட்டி மானியம்: தமிழ்நாட்டில், நூற்பு ஆலைகளில் உள்ள 15 ஆண்டுகளுக்கு மேலான பழைய நூற்பு இயந்திரங்கள்—இது உலகத்திலேயே எங்கும் இல்லாதது. இது ஒன்றும் சாதாரணது அல்ல. தலைவர் அவர்கள் அவையில் இல்லையே! 15 வருடங்களுக்கும் மேலாக நூற்பு ஆலைகளில் உள்ள பழைய இயந்திரங்கள். இதற்கு முன்பு 2 சதவிகிதம் subsidy என்பது interestக்கு வழங்கப்பட்டது. Bankல் loan பெற்றால், 2 சதவிகிதம் interestஐ 2 சதவிகிதம் subsidy ஆக அரசே ஏற்றுக்கொள்ளும். அப்படித் தான் இருந்தது. ஆனால், இப்போது, முதலமைச்சர் அவர்கள் 2 சதவிகிதம் என்பதை 6 சதவிகிதம் என்று உயர்த்தியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், அனைத்து Associationஐ சார்ந்தவர்களும், தலைவரை வந்து பார்த்தார்கள். அடுத்த 10 ஆண்டுகளுக்கு 500 கோடி ரூபாய் ஒதுக்கிவிட்டார்கள். இந்த ஆண்டுக்கு 10 கோடி ரூபாய் மார்ச் மாதத்திற்குள் ஒப்பளிப்பு செய்யப்படும். இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இது முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் சாதனையாகும். இது சாதாரண சாதனை அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

Technical Textiles. நமது கழக அரசு, தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் Technical Textiles பிரிவினை "Sunrise and Thrust Sector" என அறிவித்து, பல முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. International Conference on Technical Textiles 2022ல் சென்னையிலும், 2023ல் கோயம்புத்தூரிலும் நடத்தப்பட்டது. National Workshop on Technical Textiles, February 2024ல், கோயம்புத்தூரில் நடத்தப்பட்டது. Technical Textiles பிரிவினை ஊக்கப்படுத்த, தொழில் துறையின்மூலம் பல்வேறு சலுகைகளை அறிவித்து, 18.3.2023 அன்று அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது. Technical Textiles & Man Made Fibre பிரிவுக்கு "Research & Developmentக்கு Corpus Fund" அமைத்து, ரூபாய் 25 கோடி ஒதுக்கீடு செய்து, 3.1.2025 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

Technical Textiles நிறுவனங்களுக்கு Working Capital Subsidy, 15%லிருந்து 25%ஆக உயர்த்தி, 10 ஆண்டு காலத்தில் வழங்கப்பட உள்ளது. Short Term Training (5 Days) on Technical Textiles to Textile Entrepreneurs (200 Persons). Govt. of Tamil Nadu sanctioned Rs.10 Lakhs on 6.11.2024. புதியதாக "Diploma in Technical Textile Technology" படிப்பு வரும் கல்வி ஆண்டில் துவங்கப்பட உள்ளது.

சர்வதேச ஜவுளி கண்காட்சிகளில், தமிழ்நாட்டைச் சேர்ந்த தொழில் முனைவோர்களின் International Trade மேம்படுத்த "Tamil Nadu Pavilion" அமைக்கப்படுகிறது. "Tamil Nadu Pavilion" என்பது நாம் எங்கு சென்றாலும் இந்த பெயரில் அமைக்கிறோம். உலக அளவில் Global Sourcing Expo, Melbourne, Australia, 2023 மற்றும் 2024 Textile Collection, Moscow, Russia, 2024, 11th Global Organization of Tamil Origin Meet and Expo, Penang, Malaysia, 2024. அதே போன்று தேசிய அளவில், Techno Tex, Mumbai, Bharat Tex, New Delhi, கண்காட்சிகளில், stall அமைக்கப்பட்டது. இதற்கான அரசின் சலுகைகள் 50% subsidy அதாவது, stall ரூ.100 என்றால் ரூ.50 நாம் கொடுத்துவிடுகிறோம். அதே போன்று அவர்கள் வெளிநாடுகள் செல்வதற்கான 50% flight Charges அரசால் வழங்கப்படுகிறது.

அதேபோன்று, திறன் மேம்பாட்டுப் பயிற்சி. Tamil Nadu Skill Development Corporation மற்றும் Coimbatore SITRA மூலம், Spinning, Weaving, Knitting, Technical Textiles பிரிவுகளில் ஜவுளி தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. Fabric Cutting Machines for Readymade Garment Units (Budget 2025-26), Readymade Garment and Home Textile, பொது வசதி மையங்களில், 50% Capital Subsidyயுடன், CAD/CAM வசதியுடன், Fully Computerized Fabric Cutting Machines நிறுவும் திட்டம், அடுத்த 5 ஆண்டுகளில், ரூ.50 கோடி மதிப்பில், செயல்படுத்தப்பட உள்ளது.

Tamil Nadu Technical Textile Mission. தமிழ்நாட்டில், Technical Textiles உற்பத்தி மற்றும் அதன் முதலீடுகளை ஊக்குவிக்க, ரூ.15 கோடி மதிப்பில், Tamil Nadu Technical Textile Mission செயல்படுத்தப்பட உள்ளது.

New Textile Policy. ஜவுளி துறையின் அனைத்துப் பிரிவினரும் பயன்பெறும் வகையில், புதிய ஜவுளி கொள்கை விரைவில் வெளியிடப்பட உள்ளது. அறிவிப்புகள் நிறைய இருக்கின்றன.

இத்துறைக்கான புதிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் பதிவு செய்கிறேன். நேரத்தின் அருமை கருதி புதிய அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் படிக்கிறேன். மீதம் உள்ளவற்றை நான் அவையில் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### அறிவிப்புகள்

1. தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அடிப்படைக் கூலியில் 10 விழுக்காடும், அகவிலைப்படியில் 10 விழுக்காடும் உயர்த்தி வழங்கப்படும். இதன்மூலம் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் நெசவாளர்கள் பயன் அடைவர்

2. வேட்டி மற்றும் சேலை வழங்கும் திட்டத்தின்கீழ், பெடல் தறி சேலைகளுக்கு நெசவுக் கூலி ரூபாய் 69.79லிருந்து ரூபாய் 75.95 ஆகவும், பெடல் தறி வேட்டிகளுக்கு நெசவுக் கூலி ரூபாய் 59.28லிருந்து ரூபாய் 64.38 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். இக்கூலி உயர்வினால் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூபாய் 3.75 கோடியை அரசே ஏற்கும்

3. வேட்டி மற்றும் சேலை வழங்கும் திட்டத்தின்கீழ், விசைத்தறி சேலைகளுக்கு நெசவுக் கூலி ரூபாய் 43.01லிருந்து ரூபாய் 46.75 ஆகவும், விசைத்தறி வேட்டிகளுக்கு நெசவுக் கூலி ரூபாய் 24லிருந்து ரூபாய் 26.40 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். இக்கூலி உயர்வினால் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூபாய் 8.58 கோடியை அரசே ஏற்கும்

> "தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அடிப்படைக் கூலியில் 10 விழுக்காடும், அகவிலைப்படியில் 10 விழுக்காடும் உயர்த்தி வழங்கப்படும். இதன்மூலம் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் நெசவாளர்கள் பயன் அடைவர்"

4. பள்ளி மாணாக்கர்களுக்கான சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் பெடல்தறி கேஸ்மெண்ட் இரகத்திற்கு, நெசவுக் கூலி மீட்டருக்கு ரூபாய் 7.84லிருந்து ரூபாய் 8.40 ஆகவும், விசைத்தறியில் இரகத்திற்கு நெசவுக் கூலி மீட்டருக்கு ரூபாய் 5.76லிருந்து ரூபாய் 6.40 ஆகவும், விசைத்தறி கேஸ்மெண்ட் இரகத்திற்கு நெசவுக் கூலி மீட்டருக்கு ரூபாய் 5.60லிருந்து ரூபாய் 6.16 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்

5. ஈரோடு மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையின் உலர்த்தும் திறனை (Drying Capacity) அதிகரிக்க, செங்குத்து உலர்த்தும் ரேஞ்ச் இயந்திரம் (Vertical Drying Range Machine) ரூபாய் 75 இலட்சம் செலவில் நிறுவப்படும்

6. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் இரகங்களில் புதுமையான இரகங்களை அறிமுகப்படுத்த (Product Diversification) ரூபாய் 1.55 கோடி நிதி உதவி வழங்கப்படும்

7. வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்கீழ், கைத்தறி மற்றும் பெடல் தறி சேலைகளுக்கான நெசவுக்கு முந்தைய கூலி (Preloom wages) ரூபாய் 26.67லிருந்து ரூபாய் 28 ஆகவும், கைத்தறி மற்றும் பெடல் தறி வேட்டிகளுக்கான நெசவுக்கு முந்தைய கூலி (Preloom wages) ரூபாய் 12.36லிருந்து ரூபாய் 13 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்

8. ஈரோடு சென்னிமலை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனையை மேம்படுத்த, நவீன விற்பனை நிலையம் (Modernized Showroom) ரூபாய் 22 இலட்சம் செலவில் அமைக்கப்படும்

9. கைத்தறி ஆதரவுத் திட்டத்தின்கீழ் 15 தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் வடிவமைப்பு மேம்பாட்டிற்காக (Design Development) ரூபாய் 1.20 கோடி நிதி உதவி வழங்கப்படும்

10. ஈரோடு மாவட்டத்தில் உள்ள, தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையின் பருத்திநூல் சலவைத்துணி இரகங்களின் சாயமிடும் திறனை அதிகரிக்க 4 இரட்டை முனை ஜிகர் சாயமிடும் இயந்திரங்கள் (Double End Jigger Dyeing Machines) ரூபாய் 37 இலட்சம் செலவில் நிறுவப்படும்

11. கைத்தறி துணி இரகங்கள் உற்பத்தியில் ஈடுபட்டுவரும் 60 திறன்மிகு நெசவாளர் விருதுக்கான (Talented Weavers Award) பரிசுத் தொகை முதல் பரிசு ரூபாய் 10,000லிருந்து ரூபாய் 25,000 ஆகவும், இரண்டாம் பரிசு ரூபாய் 6,000லிருந்து ரூபாய் 15,000 ஆகவும் மற்றும் மூன்றாம் பரிசு ரூபாய் 4,000லிருந்து ரூபாய் 10,000 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்

12. வீட்டு உபயோக கைத்தறி இரகங்களின் ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில் ஈரோடு பகுதியை சார்ந்த 3 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 27 நவீன தையல் இயந்திரங்கள் (Modernized Sewing Machines) ரூபாய் 12 இலட்சம் செலவில் வழங்கப்படும்

13. வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்கீழ், கைத்தறி மற்றும் பெடல் தறி சேலைகள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 40எஸ் கிரே சிட்டா நூல் சாயமிடும் கட்டணம் (Dyeing Charges) ஒரு கட்டுக்கு ரூபாய் 130லிருந்து ரூபாய் 140 ஆக உயர்த்தி வழங்கப்படும்

14. ஈரோடு மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் பாலியெஸ்டர் துணிகளை சாயமிடும் திறனை மேம்படுத்தும் விதமாக, ஜெட் சாயமிடும் இயந்திரம் (Jet Dyeing Machine) ரூபாய் 19 இலட்சம் செலவில் நிறுவப்படும்

15. கடலூர் மாவட்டம், கஞ்சமநாதன்பேட்டை மற்றும் புவனகிரி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கைத்தறி ஆதரவுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 36 இலட்சம் செலவில் 2 தறிக் கூடங்கள் (Loom Work sheds) நிறுவப்படும்

16. கைத்தறி துணிகளின் விற்பனையை அதிகரிப்பதற்கு ஏதுவாக மாநில அளவிலான 5 சிறப்பு கைத்தறிக் கண்காட்சிகள் (Special Handloom Expo) ரூபாய் 1.50 கோடி திட்டச் செலவில் நடத்தப்படும்

17. மாநில அளவிலான சிறந்த வடிவமைப்பாளர் விருதுக்கான (Best Designer Award) முதல் பரிசுத் தொகை ரூபாய் 25,000லிருந்து ரூபாய் 1,00,000 ஆகவும், இரண்டாம் பரிசுத் தொகை ரூபாய் 10,000லிருந்து ரூபாய் 75,000 ஆகவும் மற்றும் மூன்றாம் பரிசுத் தொகை ரூபாய் 5,000 லிருந்து ரூபாய் 50,000 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்

18. தஞ்சாவூர் மாவட்டம், திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் விற்பனையை அதிகரிக்க "இல்லம் தேடி பட்டு (Illam Thedi Pattu)" திட்டம் செயல்படுத்தப்படும்

19. கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினராக உள்ள நெசவாளர்கள் 60 வயது நிறைவடைந்த பின் ஓய்வூதியம் பெறுவதற்கு ஏதுவாக திட்டத்தில் 59 வயது முதல் 60 வயது வரையிலான 2 ஆண்டுகளில் 6 மாதங்களுக்கு மேல் தொடர்ந்து தொழில் செய்து இருக்க வேண்டும் என்ற நிபந்தனை தளர்த்தப்பட்டு 56 வயது முதல் 60 வயது வரையிலான 5 ஆண்டுகளில் ஓராண்டு தொழில் செய்திருக்க வேண்டும் என மாற்றியமைக்கப்படும்

20. காஞ்சிபுரத்தில் உள்ள தமிழ்நாடு ஜரிகை ஆலையில் X R F ஜரிகை பகுப்பாய்வு இயந்திரம் ரூபாய் 25 இலட்சம் மதிப்பில் நிறுவப்படும்

21. ஈரோட்டில் உள்ள சென்னிமலை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் கணினி தொழில்நுட்ப வடிவமைப்பு மையம் (Computer Aided Technology Design Centre) நிறுவப்படும்

22. கோஆப்டெக்ஸ் விற்பனை நிலை யங்களில் பணிபுரியும் ஊழியர்களை ஊக்குவிக்கவும், கைத்தறி இரகங்களின் விற்பனையை மேம்படுத்தவும் விற்பனையாளர்களுக்கு மாதாந்திர விற்பனை ஊக்கத்தொகை (Sales Incentive) திட்டம், ஆண்டுக்கு ரூபாய் 50 இலட்சம் மதிப்பில் செயல்படுத்தப்படும்

23. ஐதராபாத்தில் உள்ள கோஆப்டெக்ஸ் லாவண்யா விற்பனை நிலையம் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள ஆர்.எஸ்.புரம் விற்பனை நிலையம் ரூபாய் 1.50 கோடி மதிப்பில் நவீனப்படுத்தப்படும்

24. கோஆப்டெக்ஸில் ரூபாய் 35 இலட்சம் மதிப்பில் 5,000 எண்ணிக்கையில் உயர்தர சுருக்கமில்லா ஆயத்த சட்டைகள் (Wrinkle Free Shirts) விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்படும்

25. உலகெங்கும் பரந்துள்ள வாடிக்கையாளர்களுக்கு கைத்தறி இரகங்கள் சென்றடைய கோஆப்டெக்ஸ் மின்வணிக விற்பனையை அதிகரிக்க கோஆப்டெக்ஸ் மின்வணிக வலைதளம் (eCommerce Website) ரூபாய் 20 இலட்சம் மதிப்பில் முற்றிலும் நவீனப்படுத்தப்படும்

26. கோஆப்டெக்ஸ் விற்பனை சந்தையை விரிவாக்கவும், அதிகமான வாடிக்கையாளர்களிடையே கைத்தறி இரகங்கள் சென்றடையவும், கோஆப்டெக்ஸ் "தனி உரிமை விற்பனை நிலையங்கள்" (Franchise Model Showrooms) திட்டம் அறிமுகப்படுத்தப்படும்

27. ராணிப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் நகராட்சி நிருவாகத்தால் கட்டித்தரப்படும் கட்டடத்தில் நவீன வசதிகளுடன்கூடிய கோஆப்டெக்ஸின் "ஒருங்கிணைந்த கைத்தறி விற்பனை வளாகம்" (Integrated Handloom Sales Complex) ரூபாய் 1.50 கோடி மதிப்பில் அமைக்கப்படும்

### துணிநூல் துறை

1. தமிழ்நாட்டில் ஜவுளித் தொழில் செறிவு மிகுந்த பகுதிகளில் வணிக மேம்பாட்டிற்காக ஜவுளித் தொழில் தொடர்பான சர்வதேச ஜவுளிக் கண்காட்சி (International Textile Expo) ரூபாய் 1.50 கோடி செலவில் ஆண்டுதோறும் நடத்தப்படும்

2. தமிழ்நாட்டில் ஜவுளி ஏற்றுமதியினை அதிகரிக்க குறு, சிறு, நடுத்தர ஜவுளி உற்பத்தியாளர்களுக்கும் உலகம் முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களுக்கும் இடையே சந்தை இணைப்பை ஏற்படுத்த, துணிநூல் துறையில் மின் வணிக தள வசதியுடன் (eCommerce Platform) கூடிய பிரத்யேக ஜவுளி வர்த்தக வசதி மையம் (Textile Trade Facilitation Centre) ரூபாய் 50 இலட்சம் செலவில் அமைக்கப்படும்

3. கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தில் ஜவுளி உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கில் ரூபாய் 45 இலட்சம் மதிப்பில் புதியதாக ஒரு ரேப்பியர் தானியங்கி தறி (New Rapier Auto Loom) நிறுவப்படும்

4. தமிழ்நாட்டில் இயங்கி வரும் ஆறு கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் நூல்களின் தரத்தினை மேம்படுத்த ரூபாய் 6.30 கோடி மதிப்பில் அத்தியாவசிய பராமரிப்பு பணிகள் (Essential Maintenance Works) மேற்கொள்ளப்படும்

5. தமிழ்நாட்டின் ஜவுளி ஏற்றுமதியாளர்களுக்கு உதவும் வகையில் பல்வேறு நாடுகளில் கோரப்படும் இணக்கச் சான்றிதழ்களின் (Compendium of Compliance Certificates) விவரங்கள் அடங்கிய தொகுப்பு ரூபாய் 25 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்

6. துணிநூல் துறையில் பணியாற்றி வரும் தொழில்நுட்பக் கல்வி சாரா அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு (NonTechnical Staff) ஜவுளித் தொழில் மற்றும் கூட்டுறவு நூற்பாலையின் செயல்பாடுகள் தொடர்பான பயிற்சி ரூபாய் 15 இலட்சம் செலவில் வழங்கப்படும்

7. ஜவுளி ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஜவுளித் துறையில் அவர்களது பங்களிப்பினை அங்கீகரிக்கும் முகமாக ஆண்டுதோறும் குறு, சிறு, நடுத்தர, பெரிய மற்றும் மிகப்பெரிய ஏற்றுமதியாளர்களுக்கென 5 பிரிவுகளில் சிறந்த ஏற்றுமதியாளர் விருதுகள் (Best Exporter Awards) ரூபாய் 12 இலட்சம் செலவில் வழங்கப்படும்

இவ்வாறு அமைச்சர் ஆர். காந்தி பேசினார்

---

சம்பள உயர்வை விட - எம்.பி.க்களின்

## தொகுதி மேம்பாட்டு நிதியை அதிகப்படுத்துக!

### மக்களவையில் சி.என். அண்ணாதுரை வலியுறுத்தல்!

புதுசுடெல்லி, மார்ச் 31-

நாடாளுமன்ற உறுப்பினர்களக் 26 சதவிகித சம்பளம் மற்றம் இதர சலுகைகளை ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. அதற்குப் பதிலக. எம்.பி.க்கள் மேம்பாட்டு நிதியை அதிகப்படுத்தி தர வேண்டும் என்று மக்களவையில் திரு வண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என். அண்ணாதுரை வலியுறுத்தியுள்ளார்.



மக்களவையில் அவர் பேசியது வருமாறு :

தமிழ்நாட்டில் கடநத் நான்கைந்து மாதங்களாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சி உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 100 நாள் வேலையில் பணியாற்றும் கிராமப்புற தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்க முடியவில்லை.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு அளிக்க வேண்டிய தொகையான ரூபாய் 4 ஆயிரம் கோடிக்கும் மேற்பட்டத் தொகை இன்னமும் விடுவிக்காமல் இருப்பதே இதற்குக் காரணம்.

இது தொடர்பாக எங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் பிரதமர் மோடிக்கும் அது தொடர்பான ஒன்றிய அமைச்சருக்கும் கடிதம் எழுதி வலியுறுத்தி உள்ளார். நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி உள்ளிட்டவர்களும் மக்களவையிலும் நேரிலும் வலியுறுத்தி உள்ளார்.

எனவே இனியும் தாமதம் செய்யாமல் நிலுவையில் உள்ள ரூபாய் 4 ஆயிரம் கோடிக்கும் மேற்பட்ட தொகை விடுவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்தில் இன்னொரு தகவல் கிடைத்துள்ளது. அதாவது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 26 சதவிகிதம் சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது. அத்துடன் இதர சலுகைகளும் அறிவிக்கப்பட்டுள்ளது. எங்களைப் பொறுத்தவரையில், சம்பள உயர்வை விட, 100 நாள் வேலை திட்டத்தில் பணியாற்றுபவர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை இனியும் தாமதப்படுத்தாமல் தமிழ்நாடு அரசுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்துடன் இன்னொரு வேண்டுகோள், சம்பள உயர்வை விட, எங்களுக்கு தொகுதி மேம்பாட்டு நிதியை மேலும் அதிகரித்து வழங்கினால், தொகுதி மக்களுக்கு உதவிகரமாக இருக்கும். எனவே என்னுடைய இரண்டு கோரிக்கைகளையும் ஒன்றிய அரசு உடனடியாக நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சி.என். அண்ணாதுரை பேசினார்.

---

மாநகரக் கழகச் செயலாளர் ப. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

## வேலூர் மாநகரில் 6072 இஸ்லாமிய குடும்பங்களுக்கு நல உதவிகள்!

### மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.-தி.அ.முகமது சகி - கதிர் ஆனந்த் எம்.பி. - மேயர் சுஜாதா ஆனந்தகுமார் வழங்கினர்!

வேலூர், மார்ச் 31-

வேலூர் மாநகரில் 6072 இஸ்லாமிய குடும்பங்களுக்கு நல உதவிகளை மாநகரச் செயலாளர் ப. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் வழங்கப்பட்டது.

இது பற்றிய விவரம் வருமாறு:-

வேலூர் மாநகர திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் முதல்வர் கழக தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாளை ஒட்டியும், புனித ரமலான் திருநாள் முன்னிட்டு மாநகரக் கழகச் செயலாளர் வேலூர் சட்டப்பேரவை உறுப்பினர் ப. கார்த்திகேயன் தலைமையில் அவருடைய ஏற்பாட்டில் 6072 இஸ்லாமிய குடும்பங்களுக்கு பிரியாணிக்கு தேவையான மளிகை பொருட்களும் இறைச்சி வாங்கிக்கொள்ள ரூபாய் 200 வழங்கப்பட்டது.

இத்தொகுப்பினை மாவட்ட கழக செயலாளர் அணைக்கட்டு சட்டப்பேரவை உறுப்பினர் ஏபி நந்தகுமார் பட்ட கழகத்தின் அவை தலைவர் தி. அ. முகமது சகி வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி எம் கதிர் ஆனந்த் வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் வழங்கினர்.

நிகழ்ச்சிக்கு மாநகர அவை தலைவர் சூரி என்கின்ற கோவிந்தன் துணை செயலாளர் ஒய். தேவநேசன் பகுதிகழகத்தின் செயலாளர்கள் ஆர் பி .இ சசிகுமார் எம். ஏ கணேச சங்கர் எஸ் தயால் ராஜ் வி.ஜி .கே சுந்தரவிஜி ஆர். சத்தியமூர்த்தி ஜி. பாலமுரளி கிருஷ்ணா, முனவர் பாஷா, பி முருகப்பெருமாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர் பி ஏழுமலை பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். கதிரேசன் சி. சந்திரசேகர் மா ப.அன்பு நிதி கே.தயாளமூர்த்தி மாநில சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளர் எம் நூருல்லா மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ஜி ரமேஷ் மண்டல குழு தலைவர்கள் வீனஸ் நரேந்திரன் யூசுப் கான் மற்றும் மாநகர அணிகளின் நிர்வாகிகள் பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் என பலர் கலந்து கொண்டனர்.